LIBRARY
12 OCT 2011
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MAMAGEMENT

## EXTERNAL DEGREE PROGRAMME

## First Examination in Bachelor of Business Administration - 2007/2008/ Bachelor of Economics - 2008/2009 (March/April 2011)(Proper/Repeat)

## EXB/EXE 1084 Financial Accounting

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக | நேரம்: 3 மணித்தியாலங்கள்

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது

1. AMC plc. கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து 31.12.2010 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி பின்வருமாறு:

**31.12.2010 இல் உள்ளவாறான பரீட்சை மீதி**

| விடயங்கள் | வரவு | செலவு |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நடைமுறைல்லாச் சொத்துக்கள் (கிரயத்தில்): | | |
| காணி கட்டடம் (காணி ரூ.500000) | 1000000 | |
| தளபாடமும் பொருத்திகளும் | 500000 | |
| மோட்டார் வாகனங்கள் | 800000 | |
| பொது ஒதுக்கம் | | 400000 |
| நிறுத்தி வைத்த இலாப மீதி 01.01.2010 இல் | | 300000 |
| 10% தொகுதிக்கடன்கள் | | 200000 |
| முதலீடுகள் | 250000 | |
| ஐயக் கடனுக்கான ஏற்பாடு 01.01.2010 இல் | | 20000 |
| முதலீட்டு வருமானம் | | 30000 |
| காசும் வங்கியும் | 365000 | |
| 01.01.2010 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு: | | |
| காணி கட்டடம் | | 100000 |
| தளபாடமும் பொருத்திகளும் | | 60000 |
| மோட்டார் வாகனங்கள் | | 300000 |
| கொள்வனவுகள் / விற்பனைகள் | 1200000 | 2500000 |
| கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | 430000 | 310000 |
| செலுத்திய வருமான வரி | 250000 | |
| 2009 ஆம் இறுதிக்காலாண்டுக்கான வருமான வரி ஏற்பாடு | | 80000 |
| நிர்வாக செலவினங்கள் | 250000 | |
| செலுத்திய தொகுதிக்கடன் வட்டி | 10000 | |
| கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனம் | | 1200000 |
| கூறப்பட்ட 12% முன்னுரிமைப் பங்கு மூலதனம் | | 500000 |
| செலுத்திய இடைக்காலப் பங்கிலாபம் - சாதாரண பங்குகள் | 50000 | |
| - முன்னுரிமைப் பங்குகள் | 30000 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 45000 | |
| தீயழிவு நட்டம் | 50000 | |
| நன்கொடைகள் | 60000 | |
| விற்பனை விநியோகச் செலவினங்கள் | 260000 | |
| இருப்புக்கள் 01.01.2010 இல் | 250000 | |
| இயக்குனர் வேதனங்கள் | 200000 | |
| | **6000000** | **6000000** |

LIBRARY 12 OCT 2011

மேலதிகத் தகவல்கள்:

I. 31.12.2010 இல் இருப்புக்கள்- ரூ.300000.

II. 31.12.2010 இல் சென்மதியாவுள்ள நிர்வாக செலவினங்கள் ரூ. 40000

III. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

| | |
|---|---|
| கட்டடம் | - 2.5% கிரயத்தில் |
| தளபாடம் பொருத்திகள் | - 10% குறைந்துசெல் மீதியில் |
| மோட்டார் வாகனங்கள் | - 20% கிரயத்தில் |

IV. கடன்பட்டோரிலிருந்து ரூ.20000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும். அத்துடன் மிகுதிக்கடன்பட்டோரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

V. 2009 இன் இறுதிக் காலாண்டின் வருமான வரி ரூ.70000 என ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வாண்டில் செலுத்தப்பட்டது. நடப்பாண்டின் (2010) இறுதிக் காலாண்டுக்கான வருமான வரியேற்பாடு ரூ.60000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

VI. காணி ரூ.550000 ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. இப் பெறுமதியையே கணக்கில் காட்டுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

VII. இயக்குனர்கள் பின்வருமாறு தீர்மானித்துள்ளனர்:

(அ) ரூ.70000 ஐ பொதுஒதுக்கத்திற்கு மாற்றுதல்

(ஆ) சாதாரண பங்குதாரர்களுக்கு ரூ.50000 இறுதிப் பங்கிலாபத்தினையும் முன்னுரிமைப்பங்கு தாரர்களுக்குரிய இறுதிப்பங்கிலாபத்தினையும் வழங்குதல்.

வேண்டப்படுவது :

சாதாரண பங்குதாரருக்கு பிரசுரிக்கத்தக்க வகையில் AMC plc. கம்பனியின் 31.12.2010 இல் முடிவுற்ற ஆண்டுகான வருமானக் கூற்று, உரிமையில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று, மற்றும் 31.12.2010 இல் உள்ளவாறான ஐந்தொகை என்பவற்றைத் தயாரிக்குக. (குறிப்புக்களையும் செய்கைகளையும் தெளிவாகக் காட்டுக.)

**(35 புள்ளிகள்)**

**2.** ஒரு தனிவியாபாரியாகிய திரு.நவம் என்பவர் அவரது கணக்கேடுகளை முறையாகப் பேணவில்லை. ஆயினும் 31.12.2010 இல் முடிவுற்ற அவரது நிதியாண்டிற்கான பின்வரும் நிதித் தகவல்களை வழங்கக் கூடியவராகவுள்ளார்.

I. 01.01.2010 இலும் 31.12.2010 இலும் உள்ளவாறான சொத்துக்களும் பொறுப்புக்களும்:

| | 01.01.2010 | 31.12.2010 |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 250000 | 350000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 40000 | 60000 |
| இருப்புக்கள் | 70000 | 85000 |
| வங்கி மீதி | 18000 | 22000 |
| காசு மீதி | 3000 | 3000 |
| வியாபாரக் கடன்கொடுத்தோர் | 55000 | 60000 |

II. 31.12.2010 இல் முடிவுற்ற ஆண்டுக்கான கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம்:

| | | ரூபா. |
|---|---|---|
| வங்கியிடப்பட்ட காசு | | 650000 |
| வங்கி மூலம் செலுத்தப்பட்ட தனிப்பட்ட செலவுகள் | | 25000 |
| மொத்தக் கொள்வனவுகள் | | 525000 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு | | 700000 |
| கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட காசோலைகள் | | 460000 |
| காசு மூலம் செலுத்திய செலவுகள்: | கூலியும் சம்பளமும் | 40000 |
| | விநியோக செலவுகள் | 70000 |
| | பொதுச் செலவுகள் | 30000 |
| காசோலை மூலம் செலுத்திய செலவுகள்: | வாடகையும் வரியும் | 20000 |
| | மின்கட்டணம் | 16000 |
| காசு விற்பனைகள் | | 150000 |
| காசோலை மூலம் மோட்டார் வாகனக் கொள்வனவு | | 125000 |

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

i. 01.01.2010 இல் உள்ளவாறான ஐந்தொகை

ii. 31.12.2010 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசேடு (இரட்டை நிரல்)

iii. 31.12.2010 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு

iv. 31.12.2010 இல் உள்ளவாறான ஐந்தொகை

(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(25 புள்ளிகள்)**

3. (I) மாதவன் என்னும் வியாபாரியின் 31.12.2010 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீ இணங்கவில்லை. வித்தியாசம் ரூ.3250 தொங்கல் கணக்கு ஒன்றில் செலவில் இடப்பட் பரீட்சை மீதி இணங்கச்செய்யப்பட்ட பின்னர் (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட முன்னா ஏடுகளைப் பரிசோதித்த போது பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(i) சம்பளம் செலுத்தியது ரூ.65000 அக் கணக்கில் ரூ.56000 ஆக பதியப்பட்டிருந்தது
(ii) விற்பனைத் திரும்பல் நாளேடு ரூ.10000 ஆல் கூட்டிக் கூட்டப்பட்டிருந்தது.
(iii) பெற்ற வாடகை ரூ.9500 கொடுத்த வாடகைக் கணக்கில் ரூ.6500 ஆக பதியப்பட்டிருந்தது
(iv) கடன் விற்பனை ரூ.7500 கடன்பட்டோர் கணக்கில் ரூ.750 ஆக பதியப்பட்டிருந்தது.
(v) முதலீட்டு வருமானம் ரூ.2000 அக் கணக்கில் பதியப்படவில்லை

வேண்டப்படுவது:

(a) மேற்கூறிய வழுக்களைத் திருத்துவதற்கான (இறுதிக்கணக்குகள் தயாரிக்கப்பட முன்னர்) நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.
(b) தொங்கல் கணக்கினை தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

(II) செல்லையா எனும் வியாபாரியின் காசேட்டின் வங்கி நிரல் 31.12.2010 இல் ரூ.44500 வரவு மீதியைக் காட்டியது. ஆனால் அதே மாதத்திற்கான அவரது வங்கிக் கூற்று வேறு ஒரு மீதியைக் காட்டியது. காசேட்டையும் வங்கிக் கூற்றையும் ஒப்பிடும் பொழுது பின்வரும் வேறுபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

(i) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ.20000 அத் திகதி வரை வங்கியில் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
(ii) வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூ.75000 காசோலைகளில் ரூ.50000 மாத்திரமே 31.12.2010 வரை வங்கியால் சேகரிக்கப்பட்டிருந்தது.
(iii) வங்கியால் பெறப்பட்ட பங்கிலாபம் ரூ.4500 காசேட்டில் பதியப்படவில்லை.
(iv) வங்கியால் செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூ.3500 காசேட்டில் இடம்பெறவில்லை.
(v) காசேட்டின் வரவுப் பக்க கூட்டுத்தொகை ரூ.1000 ஆல் குறைத்துக் கூட்டப்பட்டிருந்தது
(vi) வங்கிக் கட்டணம் ரூ.1500 காசேட்டில் பதியப்படவில்லை.
(vii) சென்மதி உண்டியல் ரூ.4000 வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது. ஆனால் அது காசேட்டில் பதியப்படவில்லை
(viii) வருமதி உண்டியல் ரூ.8000 ஆனது ரூ.200 கழிவுடன் வங்கியில் மாற்றப்பட்டிருந்தது ஆனால் அது காசேட்டில் இடம்பெறவில்லை.

வேண்டப்படுவது:

(i) காசேட்டை திருத்துக.
(ii) திருத்திய காசேட்டின் படியான வங்கி மீதியை அடிப்படையாகக் கொண்டு 31.12.2010 இல் உள்ளவாறான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

கல்வி நிறுவனம் ஒன்றின் நிதித்தரவுகள் பின்வருமாறு:

**31.12.2010 இல் உள்ளவாறான பரீட்சை மீதி**

| விடயங்கள் | வரவு | செலவு |
|---|---|---|
| | ரூபா. | ரூபா. |
| காணிகட்டடம் | 250000 | |
| தளபாடம் | 40000 | |
| நுழைவுக் கட்டணம் | | 5000 |
| பயிற்சிக் கட்டணம் | | 200000 |
| வாசிகசாலை புத்தகங்கள் | 60000 | |
| 9% முதலீடுகள் | 200000 | |
| சம்பளங்கள் | 200000 | |
| வழங்குனர்கள் | | 6000 |
| மண்டப வாடகை | | 4000 |
| நானவித வருமானங்கள் | | 12000 |
| காகிதாதிகள் | 15000 | |
| பொதுச் செலவுகள் | 8000 | |
| வருடாந்த விளையாட்டுச் செலவுகள் | 6000 | |
| அரச நன்கொடைகள் | | 140000 |
| திரண்ட நிதி | | 400000 |
| வாசிகசாலை புத்தகங்கள் வாங்குவதற்கான நன்கொடை | | 25000 |
| பழைய தளபாட விற்பனை | | 8000 |
| காசு மீதி | 1000 | |
| வங்கி மீதி | 20000 | |
| | **800000** | **800000** |

மேலதிகத் தகவல்கள்:

(i) 31.12.2010 இல் பயிற்சிக் கட்டணம் வருமதி: ரூ.10000

(ii) 31.12.2008 இல் சம்பளம் சென்மதி: ரூ.12000

(iii) ரூ.15000 பெறுமதியான தளபாடங்கள் 01.07.2010 இல் கொள்வனவு செய்யப்பட்டன.

(iv) 01.01.2010 இல் விற்பனை செய்யப்பட்ட தளபாடத்தின் புத்தகப் பெறுமதி ரூ.20000.

(v) நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கு அவற்றின் புத்தகப் பெறுமதிகளில் பின்வருமாறு பெறுமானத்தேய்வுக்கு ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்:

காணிகட்டடம் - 5%

தளபாடம் - 15%

வாசிகசாலை புத்தகங்கள் - 5%

(vi) வாசிகசாலை புத்தகங்கள் வாங்குவதற்கான நன்கொடை ஆண்டுக்காலத்தில் முற்றாகப் பயன்படுத்தப்பட்டது.

வேண்டப்படுவது:

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

i. 31.12.2010 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு

ii. 31.12.2010 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று.
(செய்கைகளைத் தெளிவாகக் காட்டுக)

**(20 புள்ளிகள்)**